விடை—

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கும்பகோணம் ஊராட்சி, அன்னை அஞ்சுகம் நகர், சாக்கோட்டை ஊராட்சி, சீனிவாச நகர் மற்றும் பெரியார் நகர் ஆகிய பகுதிகளில் சறுக்குப் பயிற்சிக்கான விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வெள்ளத் தணிப்புப் பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின் விளைவாக அடையாறு, ஆரணியாறு, கொசஸ்தலையாறு, கூவம் மற்றும் கோவளம் ஆற்றுப்படுகைகளில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் மற்றும் ஊரகப் பகுதிகளிலுள்ள குடியிருப்புகள் நீரில் மூழ்குகின்ற நிலைமை அவ்வப்போது ஏற்படுகின்றது.

அப்பகுதிகளில் வெள்ளத் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நடப்பாண்டில் மாநில நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து, அப்பகுதிகளில் வெள்ள நீர் தங்குதடையின்றி வெளியேற்றப்படும் வகையில், தொடர்புடைய ஏரிகளுக்கு இணைப்புக் கால்வாய்கள் அமைத்தல், மூடிய கால்வாய்களைப் புனரமைத்தல், பாசனமில்லாத ஏரிகளை ஆழப்படுத்தி நீர்த் தேக்கங்களாக மாற்றுதல், வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்பினை ஏற்படுத்துதல், உபரி நீர்க் கால்வாய்கள் மற்றும் சாலையோர கால்வாய்களை அகலப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், திரு. ராமசாமி படையாச்சியார் மற்றும் நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் ஆகியோரின் பிறந்த நாட்களை அரசு விழாக்களாகக் கொண்டாடுதல், பத்திரிகையாளர் ஓய்வூதியத்திற்கான பணிக்கொடையின் வருமான உச்சவரம்பை உயர்த்துதல், பத்திரிகையாளர் நல நிதியம்மூலம் அவர்களின் சிகிச்சைக்கு வழங்கப்படும் தொகையை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி, மக்கள் தொடர்புத் துறை. உலகத் தமிழர்களின் இதயங்களில் தங்க சிம்மாசனம் இட்டு அமர்ந்திருப்பவரும், திராவிட ஆட்சி தமிழ்நாட்டில் நிலைபெற வித்திட்டவரும், தன்னை ஈன்ற தமிழகத்திற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டி பெருமை சேர்த்தவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தை புதுப்பித்தல், பதிக்கப்பட்டுள்ள கிரானைட் கற்களைப் புதுப்பித்தல், புல்வெளி சீரமைத்தல், மின் பணிகள் மற்றும் இதர புனரமைப்புப் பணிகள் 4 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)